Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

வாரம் - 15

பாடம்: தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம்: 11

தொகுப்பு இரா.யசந்தன்
கே/உந்துகொடை தமிழ் மகா வித்தியாலயம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- 1 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றின் கீழும் 1, 2, 3, 4 என்று இலக்கமிடப்பிடப்பட்டிருக்கும் தெரிவுகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க

---

01. பெரியோருடன் சேர்ந்த சிறியோரும் சிறப்படைவர் என்ற கருத்தினை விளக்க பொருத்தமான உவமைத்தொடர்
    1. சேற்றில் முளைத்த செந்தாமரைபோல
    2. ஊசிவழிப் பின்தொடரும் நூல் போல
    3. பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெற்றால் போல
    4. சிங்கத்தின் காட்டை சிறுநரி வளைத்தால் போல
02. பனையின் இளங்காய் நுங்கு என்பது போல வாழையின் இளங்காய்
    1. கச்சல் 2. வடு 3. குரும்பை 4. பிஞ்சு
03. மூடருக்கும் பேடருக்கும் முதியோர் மெலியோருக்கும் என்பதில் மூடர் என்பது
    1. நல்லவர் 2. அறிவிலி 3. அறிவாளி 4. கயவர்
04. பின்வருவனவற்றுள் செயப்படுபொருளை ஏற்காத வினைமுற்று
    1. சிரித்தான் 2. படித்தான் 3. பாடினான் 4. எழுதினான்
05. உம்மைத்தொகையாக வந்துள்ள தொடர்
    1. முக்குணம் 2. வரவு செலவு 3. மலைக்கோயில் 4. விடுகதை
06. பின்வருவனவற்றுள் இயல்புப்புணர்ச்சி பெறுவது
    1. கைந்நூல் 2. பாற்குடம் 3.கடலலை 4. பனையோலை
07. வேடர் கள்ளை சொல்விளம்பி என்பர். இங்கு சொல்விளம்பி என்பது
    1. இடக்கரடக்கல் 2. குழூஉக்குறி 3. மங்கலம் 4. மரூஉ
08. எமக்கு உதவி செய்தவருக்கு ஒருபோதும் துரோகம் செய்யக்கூடாது என்னும் கருத்தைத் தரும் பழமொழி
    1. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
    2. எரிகிறவீட்டில் பிடுங்கினது லாபம்
    3. ஊரோடு ஒத்துவாழ்
    4. அன்னமிட்டவர் வீட்டில் கன்னமிடாதே
09. மிகத்தெளிவாக புலப்படுதல் என்ற பொருள் தரும் உவமைத்தொடர்
    1. ஆற்றில் கரைத்த புளிபோல
    2. குடத்துள் விளக்கு போல
    3. இலைமறைகாய் போல
    4. உள்ளங்கை நெல்லிக்கனி போல
10. நகைப்பை விளைவிக்கும் செயல் என்னும் பொருளைத்தரும் மரபுத்தொடர்
    1. கொட்டமடித்தல் 2. கச்சைகட்டுதல் 3. கோமாளிக்கூத்து 4.தலைகீழாய் நிற்றல்

பகுதி 2

பின்வரும் பாடலைப்படித்து அதன் கீழ் தரப்படுகின்ற வினாக்களுக்கு விடை எழுதுக

1. நீ தூது நடந்து அருளி எமது நினைவு அவர்க்கு உரைத்தால் நினைவின் வண்ணம்
   தாது ஊதி அளி முரலும் தண் பதியும் தாயமும் தான் தாரான் ஆகில்
   மீது ஊது வளை குலமும் வலம்புரியும் மிக முழங்க வெய்ய காலன்
   மா தூதர் மனம் களிக்க பொருது எனினும் பெறுவன் இது வசையும் அன்றே

1. குருநாட்டின் வளம் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது?
2. எவ்வாறான யுத்தத்தை செய்வதாக தர்மன் கூறுகின்றான்?
3. எதனை வசை அன்று என்று தர்மன் குறிப்பிடுகின்றான்?
4. கிருட்டினனிடம் எவற்றை தூதாக கேட்கும்படி குறிப்பிடுகின்றான்?